பரமக்குடி நகராட்சி அலுவலகம்
நாள். 20.02.2026

அன்புடையீர்,

பரமக்குடி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நிகழும் விசுவாவசு வருடம் பிப்ரவரி மாதம் ( 27.02.2026 ) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த சாதரணக் கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
பரமக்குடி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள்-1 | இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் குத்தகைக்குவிடப்பட்ட கடைகளுக்கு 2019 -2020 முதல் 2023 – 2024 ஆண்டுகள் வரை வாடகை வசூல் செய்யும் கேட்பில் சேவைவரிக்கான கட்டணம் வசூல் செய்து உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட்டதினை 2019ல் தாமதமாக செலுத்தியதற்கு அபராத தொகை விதிக்கப்பட்டது. அது சம்மந்தமாக மத்திய அரசு வரி மற்றும் ஜி.எஸ்.டி வரிக்குழு மற்றும் மாநில வரி அலுவலர் (சுற்றும் குழு-1) விருதுநகர் (நுண்ணறிவு) அவர்களின் இந்நகராட்சியில் ஆய்வு மேற்கொண்டு மேற்கெண்ட தொகைக்கான விடுவிப்பினை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பெறப்பட்ட வழக்கில் 2019-2020 முதல் 2023-2024வரை உள்ள 10 வழக்குகளுக்கு மேல்முறையீடு செய்தமைக்கும் இந்நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகியதற்கு தனியார் தணிக்கை நிறுவனமான ஆலயம் அசோசியேசன் மதுரை அவர்கள் திரு.இராமநாதன் அவர்களின் மூலம் எதிர்மறை வழக்கு தாக்கல் செய்து வழக்கு தொடர்ந்தமைக்கு அன்னாரிடமிருந்து பட்டியல் தொகை ரூ.74400/- வரப்பெற்றது. மேற்கண்ட பட்டியல் வழங்க மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக க்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.இத்தொகை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்<br>**தீர்மானம் எண். 1316 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-2 | பரமக்குடி உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு- சி, பிளாக்-3, நகரளவு எண்.10/3 ல் பரப்பளவு 2450 சமீ (0.60 ஏக்கர்) இடத்திற்கு திருமதி.ஹேமலதா என்பவர் மனைப்பிரிவு அனுமதி இறுதி ஒப்புதல் கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள்து இணைய தள அனுமதி ந.க.எண்.A5XOCH2M/RAMANATHAPURAM/2025/TCP நாள்:05.02.2025ல் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ.அலுவலகம்(இராம) எண்.06/2025 நாள்.05.02.2025ல் கண்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மனைப்பிரிவில் அனுமதி வழங்கப்பட்ட 12 மனைகளுக்கு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி மனுதார் தனது சொந்த செலவில், தார்சாலை, மழைநீர் வடிகால் குடிநீர் பகிர்மானக் குழாய் மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றை அமைந்துள்ளதற்கு மூன்றாம் தரப்பு சான்று தனியார் பொறியியல் கல்லுரியில் பெற்று சமர்பித்துள்ளார். மனுதாரர் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் ஆகியவற்றினை நகராட்சிக்கு தானப்பத்திரம் எண்.388/2025 நாள்.29.01.2025ல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் |

| | |
|---|---|
| | நகர் ஊரமைப்பு துறை மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மனைப்பிரிவு உரிமையாளர் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.507/2025/எப் 1)<br>**தீர்மானம் எண்.1317 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-3 | **இந்நகராட்சியில் குத்தகை இனத்திற்கான சேவைவரி ( Service tax) கூடிய GST தொகை பிடித்தம் செய்து அரசு கணக்கில் செலுத்தியமைக்கு இணை ஆணையர் சேவை மற்றும் சரக்குவரி அலுவலகம் விருதுநகரிலிருந்து சேவைவரி சம்மந்தமாக 24.12.2024 அன்று ஆய்வு மேற்கொண்டதில் 2018-2019 முதல் 2023-2024ம் ஆண்டுகள் வரை தாமத தொகை செலுத்த தெரிவித்ததின் படி ஆணையாளர் மூலம் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு மேல்முறையீடு செய்தமைக்கு தனியார் நிறுவனமான ஆலயம் அசோசியேசன் திருச்சி திரு.இராமநாதன் (பட்டய கணக்கர்) அவர்களை மேல்முறையீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்குக்குண்டான மேல்முறையீடு செய்ததற்கு பட்டியல் தொகை ரூ.1,60,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட தொகையினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1318 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-4 | இந்நகராட்சி சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராக திரு.ஜானகிராமன் வழக்கறிஞர் அவர்களை நகராட்சி மூலம் நியமிக்கப்பட்டார். இந்நகராட்சி தொடர்பான கீழ்க்கண்ட நகரமைப்பு பிரிவு வழக்குகளில் ஆஜராகி வழக்கு நடத்தியதற்கு உரிய வழக்கு கட்டணம் கோரி அன்னார் 11.11.2025 அன்று கேட்பு அனுப்பியுள்ளார். மேலும் தற்போது 01.11.2025 முதல் நகராட்சி சார்பாக திரு.ஜான்ராஜதுரை வழக்கறிஞர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கறிஞர் திரு.ஜானகிராமன் ஆஜராகி வழக்கு நடத்தியதற்கு உரிய வழக்கு கட்டணம் ரூ.34000/-கீழ்க்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**நகரமைப்பு பிரிவு வழக்கு விவரம்** |

| | | |
|---|---|---|
| O.S.No.95/2022 | பாலாஜி | 3000.00 |
| O.S.No.110/2013 | கேசவன் | 3000.00 |
| O.S.No.47/2025 | சந்தியாகு | 3000.00 |
| O.S.No.6/2023 | குமரேசன் | 4000.00 |
| O.S.No.85/2018 | அமீர்ஹம்சா | 3000.00 |

| | | |
|---|---|---|
| O.S.No.36/2022 | கார்த்திகேயன் | 3000.00 |
| O.S.No.37/2022 | முருகானந்தம் | 3000.00 |
| O.S.No.164/2024 | கே.கோபால் | 2000.00 |
| O.S.No.24/2021 | வி.சிவராமலிங்கம் | 5000.00 |
| O.S.No.88/2024 | இராஜேந்திரன் | 2000.00 |
| O.S.No.19/2016 | லயன்ஸ் கல்விக்குழு பூங்கா இடம் | 3000.00 |
| | **மொத்தம்** | **34000.00** |

**அலுவலக க்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1915/2025/எப்1)

**தீர்மானம் எண். 1319 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-5

பரமக்குடி உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு- B, பிளாக்-01, நகரளவு எண்.7/8A, 7/9A, 7/113 மற்றும் 7/115 ல் பரப்பளவு 1805 சமீ (0.45 ஏக்கர்) இடத்திற்கு திரு.எஸ்.பூமிநாதன் என்பவர் மனைப்பிரிவு அனுமதி இறுதி ஒப்புதல் கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள்து இணைய தள அனுமதி ந.க.எண்.X7AFGHUP/2025/TCP நாள்:26.06.2025ல் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ.அலுவலகம்(இராம) எண்.52/2025 நாள்.26.06.2025ல் கண்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மனைப்பிரிவில் அனுமதி வழங்கப்பட்ட 13 மனைகளுக்கு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி மனுதாரர் தனது சொந்த செலவில், தார்சாலை, மழைநீர் வடிகால் குடிநீர் பகிர்மானக் குழாய் மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றை அமைந்துள்ளதற்கு மூன்றாம் தரப்பு சான்று தனியார் பொறியியல் கல்லூரியில் பெற்று சமர்பித்துள்ளார். மனுதாரர் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் ஆகியவற்றினை நகராட்சிக்கு தானபத்திரம் எண்.3138/2025 நாள்.11.06.2025ல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகர் ஊரமைப்பு துறை மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மனைப்பிரிவு உரிமையாளர் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு-**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1485/2025/எப் 1)

**தீர்மானம் எண். 1320 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-6

பரமக்குடி நகராட்சி நகரநிலஅளவை ஆவணங்களின்படி வார்டு-எச், பிளாக்-19, நகரப்புல எண்.35ல் உள்ள நீர்நிலைபுறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற திரு.சங்கர் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். டபிள்யு.பி(எம்.டி)எண்.18279/2021 நாள் 16.07.2024ன் தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தீர்ப்பினை

| | |
|---|---|
| | செயல்படுத்தவில்லை என வாதியால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதன் பேரில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் மற்றும் மேல்நிலைநீர்த்தேக்க தொட்டியினை ஆக்கிரமிப்பு அகற்ற வட்டாட்சியரால் 09.12.2025 அன்று வழங்கப்பட்ட அறிவிப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தொடர்வதற்கு உரிய வழக்கு கட்டணம் ரூ.19500/- கோரி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.சரவணன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக க்குறிப்பு**<br>1. வழக்கு கட்டணத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி வழக்கின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.638/2022/எப்2)<br>**தீர்மானம் எண். 1321 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-7 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள்-09.12.2025ன் படி இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்கள், விளையாடும் இடங்கள் மற்றும் திரவிடங்கள் தொடர்பான விவரங்களை தமிர்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2023 பிரிவு 126ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய உரிய படிவத்தில் அனுப்பி வைக்க கோரப்பட்டதின்படி, இந்நகராட்சி பகுதியில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட பூங்காக்கள் விளையாடும் இடங்கள் மற்றும் திறவிடங்கள் குறித்த பட்டியலில் கண்டுள்ள இனங்களை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக க்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்ததற்கு தேவையான வரைபடங்கள் மற்றும் திட்ட பிரேரணை தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.869/2022/எப்1**<br>**தீர்மானம் எண். 1322 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-8 | நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடித எண் :ROC.NO.9514/2022/SBM2 நாள்: 06.01.2026- ன் படி SBM(U) 2.0- வில் சிறப்பு ஒருங்கிணைந்த தூய்மை பணியை மேற்கொள்ளும் பொருட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. கடந்த 15.01.2026-ம் தேதி நடந்த பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 12.01.2026 ,13.01.2026 மற்றும்14.01.2026 ஆகிய தினங்களில் திரளான பொதுமக்கள் பங்களிப்புடன் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பேனர், போஸ்டர், பிளக்ஸ் துண்டு பிரசுரங்களை பயன்படுத்தி ஒருங்கிணைந்த சிறப்பு தூய்மைப்பணி மற்றும் புகையில்லா போகி(SMOKE FREE BHOGI) - யை கொண்டாடும் பொருட்டு பொதுமக்கள் மாணவ, |

| | |
|---|---|
| | மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், புகையில்லா புகையில் மக்கள் தங்களுடைய வீடுகளில் உள்ள பழைய பொருட்களை எரிக்காமல் ஒப்படைப்பு செய்ய RRR- மையம் அமைக்கப்பட்டு பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டது. எனவே, மேற்காணும் பணிகளுக்கு ரூ. 50,000/- ( ரூபாய் ஐம்பதாயிரம் ) வரை செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வென்றப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1323 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-9 | பரமக்குடி நகராட்சி பகுதியில் 36 வார்டுகளில் 26726 வீடுகள் மற்றும் 4382 வணிக நிறுவனங்கள் உள்ளன.இவற்றில் இருந்து நாள் ஒன்றுக்கு 34.45 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் மற்றும் கழிவு நீர் உற்பத்தியாகிறது.மேலும் பொது மக்களின்,பொது சுகாதாரத்தை பேணும் பொருட்டு பொது இடங்களை சுத்தம் செய்தல்,கோவில் திருவிழாவிற்கான பணிகளை செய்தல், மழை காலங்களில் மழைநீர் தடையின்றி செல்ல வடிகால்களை சரி செய்தல், கழிவு நீர் அடைப்புகள் அகற்றுதல்,கழிவுநீர் வாய்க்கால்களில் மண்ணை எடுத்தல், எடுக்கப்பட்ட மண்ணை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பொது சுகாதார வாகனங்களான JCB இயந்திரம், செயின் டோசர், பாப்காட் மற்றும் டிராக்டர், கழிவுநீர் வாகனம் ஆகியவற்றுக்கு பழுது பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு உத்தேச செலவீனமாக ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1324 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-10 | மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:2/1721/2026 மற்றும் மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களின் கடிதம் எண் :அ3/210/2024 நாள்:13.01.2026 படி தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி திரு.வெஆறுச்சாமி அவர்கள் தலைமையில் 21.01.2026 ம் தேதி பரமக்குடி நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை நடத்த கேட்டுக் கொள்ளப்பட்டது. எனவே, மேற்காணும் நலத்திட்ட நலத்திட்ட அடையாள அட்டை மற்றும் உதவிகள் வழங்கும் விழாவினை இராஜா மஹால், மதுரை மண்டபம் ரோடு, பரமக்குடியில் சிறப்பாக நடைபெற்றதோடு, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட அடையாள அட்டை நலத்திட்ட உதவிகள் மற்றும் உணவும் நல்ல முறையில் வழங்கப்பட்டது. எனவே, மேற்காணும் நிகழ்ச்சிக்கு ஆன செலவுத் தொகை ரூ.95000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1325 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| பொருள்-11 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN65BW9213 கழிவுநீர் வாகனம் 15 வது மானியநிதி குழு - 2022-2023 மூலம் வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.தற்பொழுது மேற்கானும் வாகனத்திற்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால் TN65BW9213 கழிவுநீர வாகனத்திற்கு வருடாந்திர பழதுபணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.எனவே ,TN65BW9213 கழிவுநீர் வாகனத்திற்கு பழுதுபணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீன தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**தீர்மானம் எண்.1326 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-12 | மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை ஆனை ந.க.எண்:4/43881/2025 நாள்:02.12.2025 மற்றும் ந.க.எண்:3/32569/2023 ன் படி டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு டிசம்பர்-06 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நிலத்திட்ட அடையாள அட்டை வழங்கும் விழாவிற்கு நகராட்சிகளுக்கு பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.அதன்பேரில் பரமக்குடிக்கு நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மேடை அலங்காரம்,VIP மர இருக்கைகள்,VIP இருக்கைகள்,சிவப்பு கம்பள விரிப்பு,குத்துவிளக்கு மற்றும் இருக்கை உறைகள் முதலான பணிகள் மேற்கொள்ளகப்பட்டது,பரமக்குடி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செலவீனத்தை தொகை ரூ.52,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1327 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-13 | நகர்மன்றதீர்மான எண்.**1121** நாள் **30.10.2025** படி இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் **50 DBC** பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள **01.11.2025** முதல் **31.1.2026** வரை **3** மாத கால பணி **நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிய** நிலையில் **31.01.2026** தேதியுடன் முடிவடைவதால் மேற்கண்ட பணியானது பொது சுகாதாரப்பணி என்பதால் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் கருதி தொடர்ந்து டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் சுகாதார ஆய்வாளர்கள் அவர்களின் அறிக்கையின் படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்த பழைய தினக்கூலி ஊதிய விகிதத்துடன் கூடுதலா EPF ESI மற்றும் இதர செலவினங்களுடன் **01.02.2026** முதல் **30.04.2026** வரை மூன்று மாதகாலத்திற்கு ஏற்கனவே பணி மேற்கொண்டு வந்த நிறுவனமான Exsernet Madurai என்ற நிறுவனத்தின் மூலம் அரசு வழிகாட்டுதலின் படி பணி மேற்கொள்வதற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் முன்அனுமதிவேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>**1.**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**மேற்கண்ட செலவு தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1328 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| பொருள்-14 | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நாள் தோறும் தூய்மைப்பணிகள் மற்றும் கொசு புழு ஒழிப்புபணிகள் 36 வார்டுகளிலும் நடைபெற்று வருகிறது அனைத்து வார்டுகளில் DBC டெங்கு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் டெங்கு கொசுப்புழு ஒழிப்புகள் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் டெங்கு பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டுவருகிறது. தற்போது இந்நகர் பகுதிகளில் அமைந்துள்ள கோவில்களில் பங்குனி மாதம் மற்றும் சித்திரை மாதங்கள் முழுவதும் திருவிழாக்கள் நடைபெறும் காலம் என்பதால் மக்கள் அதிக அளவில் கூட்டம் கூடும் இடங்களில் கிருமி நாசினிகள் தெளிக்க வேண்டிநிலை உள்ளதால் சுகாதாரப்பணியானது தடையின்றி பணிமேற்கொள்ள வேண்டியுள்ளதால் தற்போது நகராட்சியில் கிருமிநாசினி பொருட்கள் இருப்பானது குறைவாக உள்ளதால் பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி கிருமிநாசினி பொருட்களான நீர்த்தசுண்ணாம்பு 20000 கிலோ பிளிச்சிங் பவுடர் 10000 கிலோ ஆகிய கிருமி நாசினி பொருட்கள் 2026–2027 ஓர் ஆண்டுக்கு கொள் முதல் செய்வதற்கு மற்றும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1000000/–க்குமட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>1. மன்றம்அனுமதிக்கலாம்.<br>2.ஓர்ஆண்டிற்கான செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலம்.<br><br>**தீர்மானம் எண். 1329 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-15 | இந்நகராட்சி அலுவலக கணினி வரி வசூல் மையத்தில் இயங்கி வந்த பிரிண்டர் பழுதடைந்துள்ளதால் வரி வசூல் பணி பாதிக்கும் நிலை உள்ளதால் பணியின் அவசர அவசியத்தைக் கருதி புதிய பிரிண்டர்கள் TVS HD 250 GOLD PRINTER 2 எண்ணம் வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1 — M/S. பெஸ்ட் நெட்ஒர்க்ஸ், 189,B இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம் — ரூ.33300/-<br>2 — M/S. ஹைடெக் கம்ப்யூட்டர்ஸ், 5/19,20 ஹோண்டா பிளாசா, அலங்காச்சேரி தெரு, இராமநாதபுரம் — ரூ.33750/-<br>3 — M/S. யூனிக் டெக்னாலஜிஸ், 96/2,என்.சி.எஸ்.சி காம்ப்ளக்ஸ், சுவாமி விவேகானந்தர் சாலை, இராமநாதபுரம் — ரூ.33980/-<br><br>மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S.பெஸ்ட் நெட்ஒர்க்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம் விலைப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு<br><br>**அலுவலககுறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br><br>**தீர்மானம் எண். 1330 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-16 | இந்நகராட்சியின் பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN65W9658 ஈப்பு வாகனத்தின் கிரவுண் ஆயில், கியர் ஆயில், கிளச் ஆயில், பிரேக் ஆயில், , ஆயில்பில்டர், டீசல் பில்டர் மற்றும் ஈப்பு வாகனத்தை ஆயில் சர்வீஸ் செய்வதற்கும் உத்தேச செலவினம் ரூ.12000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு** |

| | |
|---|---|
| | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1331 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-17 | இந்நகராட்சியின் ஆணையாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு 2 எண்ணம் இருக்கைகள் (Chair) வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரியதில், ரூ.17418x2=34836/-க்கு M/S. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் லிமிடெட்(TANSI), கப்பலூர் மதுரை என்ற நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதின் பேரில், நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் 2 எண்ணம் இருக்கைகள் (Chair) வாங்க மேல்நடவடிக்கை தொடர்ந்தது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>**அலுவலககுறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1332 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-18 | பரமக்குடி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-23-ன் கீழ் ரூ.188.00 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளி மூலம் 03.10.2025-அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு நூலகர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களால், பியூசன் மேன்பவர் அன் இன்ப்ரா சர்வீசஸ், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திற்கு 27.12.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அந்நிறுவனம் மூலம் நூலகர் ஒருவரை இந்நகராட்சிக்கு அக்டோபர் 2025 முதல் பணிபுரிய ஒப்படைத்துள்ளார்கள். நூலகம் மற்றும் அறிவுசார்மையம் நவம்பர் 2025 முதல், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டுக்கு வரப்பெற்றுள்ளது. நூலகம் மற்றும் அறிவுசார்மையத்தில் 11 கணினிகள் உள்ளன. அதற்கு தற்போது இன்டர்நெட் இணைப்பு வழங்குவதற்கு வருடாந்திர கட்டணம் ரூ.2,06,500/-ஐ உதவி பொது மேலாளர் BSNL காரைக்குடி என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>**அலுவலககுறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>**தீர்மானம் எண்.1333 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-19 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ், பரமக்குடி நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மைப்பணியாளர்கள், DBC பணியாளர்கள், பள்ளிக்கூட பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் உள்ளிட்ட 322 பணியாளர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, மேற்படி |

பணிக்கு ரூ.8.50 இலட்சத்திற்கு 22.01.2026-அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.ரெங்கசாமி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி. | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு. M.சங்கர்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி. | 0.35% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.ரெங்கசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 1334 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-20

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் 118 வது பிறந்தநாள், 63வது குருபூஜை விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் வருகை தருவதையொட்டி, இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்து தமிழக அரசின் சாதனைகளை குறித்தும் செய்திகள் தினசரி நாளிதழ்களில் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்ட விவரப்படி தொகைகள் வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ,எண் | நிறுவனம் | பட்டியல் தொகை(ரூ) |
|---|---|---|
| 1. | தினமலர் | 44438 |
| 2. | தி இந்து தமிழ் | 21000 |
| 3. | தினத்தந்தி | 40714 |
| 4. | மாலைமலர் | 33783 |
| 5. | தினகரன் | 39847 |
| | **மொத்தம்** | **179782** |

**அலுவலககுறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 1335 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-21

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட CSM போர்டிங் சாலையில் உள்ள தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு மணி மண்டபம் திறப்பு விழாவிற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகை தர உள்ளதால், மணிமண்டபம் அமைந்துள்ள CSM போர்டிங் சாலையில் தார்தளம் சேதமடைந்திருந்ததால், மாவட்ட ஆட்சித்தலைவர் இராமநாதபுரம் அவர்களின் அறிவுரையின் படி, சேதமடைந்திருந்த சாலையினை புதிய

| | |
|---|---|
| | தார்தளமாக அமைக்கும் பணிக்கு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.9,90,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தைக் கருதி குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட நாட்களுக்குள் செய்து முடிக்கும் பொருட்டு மேற்படி பணியை இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு.K.அருளாந்து ஒப்பந்ததாரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணி குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட நாட்களுக்குள் செய்து முடிக்கும் பொருட்டும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1336 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-22 | இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழக அரசு சார்பில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு முழுதிருவுருவசிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டி முடித்து திறப்பு விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் வருகை தருவதையொட்டியும், தைப்பொங்கல் திருநாள் விழாவினை முன்னிட்டும், பரமக்குடி நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்தும் செய்திகள் தினசரி நாளிதழ்களில் வெளியிட்ட வகையில், கீழ்க்கண்ட விவரப்படி தொகைகள் வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ,எண் | நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | தினமலர் | 44438 |
| 2. | மாலை முரசு | 15750 |
| 3. | மாலை முரசு | 18900 |
| 4. | தி இந்து குழுமம் | 42000 |
| 5. | தினத்தந்தி | 40714 |
| 6. | தினத்தந்தி | 40714 |
| 7. | மாலைமலர் | 33783 |
| 8. | மாலைமலர் | 33783 |
| 9. | தமிழ்முரசு | 39847 |
| 10. | தினகரன் | 39847 |
| | **மொத்தம்** | **349776** |

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1337 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | |
|---|---|
| பொருள்-23 | பரமக்குடி நகராட்சியின் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, பொதுசுகாதாரபிரிவு, வருவாய்பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் பணிபுரிந்து வந்துள்ள அலுவலக உதவியாளர்களான முத்துமணி, அகிலன் ஆகிய இருவரும் பணி ஓய்வு பெற்றுள்ளனர். முருகேசன், நாகராஜ் ஆகிய இருவரும் பணிக்காலத்தில் காலம் சென்றுவிட்டார்கள். காளிதாஸ் என்பவர் பணி மாறுதலில் இராமேஸ்வரம் சென்றுவிட்டார். முருகேசன் என்பவர் அறிக்கை ஏதும் கொடுக்காமல் நான்கு மாத காலம் தொடர்ந்து அலுவலகம் வராமல் உள்ளார். எனவே இந்நகராட்சியில் அலுவலக உதவியாளர்கள் இல்லாமல் அலுவலகப்பணி செய்யும் நிலையில் உள்ளது. நகர்மன்றக்கூட்டம் நடைபெறும் போதும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மன்றப்பொருள் தபால் கொடுப்பதற்கு மிகவும் சிரமப்படவேண்டிய சூழல் உள்ளது. அதனால் குடிநீர் சம்மந்தப்பட்ட பணிகள் பார்ப்பதற்கும் பணியாட்கள் இல்லாமலும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணி மற்றும் குடிநீர் கட்டணம் வசூல் பணி, அலுவலக பணி ஆகிய பணிகள் செய்வதற்கு வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் 10 நபர்கள் தேர்வு செய்வதற்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>மேற்கண்ட 5 நிரந்தரப்பணியாளர்களின் ஊதியத்தை விட 10 ஒப்பந்தப்பணியாளர்களின் ஊதியம் குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 1338 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-24 | சட்டமன்றத் தேர்தல்-2026 நடைபெற இருப்பதால் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 93 வாக்குச் சாவடி மையங்களில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சாய்வுதளம் (மரம் மற்றும் கான்கீரிட்) ஷாமியானா பந்தல், Pedestal Fan, போக்கஸ் விளக்கு வசதி மற்றும் மரத்தாலான தடுப்புகள்(Barricading) ஆகியவற்றை அமைத்துக் கொடுப்பது முக்கியமானதாகும். எனவே இந்நகராட்சிக்குட்பட்ட 93 வாக்குச்சாவடி மையங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, மாவட்ட ஆட்சித்தலைவர் இராமநாதபுரம் அலுவலக தேர்தல் பிரிவு அலுவலர் அறிவுறுத்தியதன் பேரில், மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,80,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண். 1339 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-25 | இந்நகராட்சி பகுதிகளில் 36 வார்டுகளில் பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளுக்கான மின்இணைப்புபெட்டிகள், அவற்றில் உள்ள சர்வீஸ் வயர்கள், எலக்ட்ரிப்பொருள்கள் ஆகியவைகள் மழைக்காலங்களில் சேதமடைந்துவிடுவதால் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களில் இரவு நேரங்களில் தெருவிளக்குகள் ஒளிராத நிலை ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு |

| | |
|---|---|
| | பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்படுவதால் நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி சேதமடைந்த மின்இணைப்புபெட்டிகள், வயரிங் மற்றும் எலக்ட்ரிப்பொருள்கள் ஆகியவற்றை புதியதாக மாற்றி அமைக்கும்படி நகர்மன்றத்தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரிலும் மேற்படி நகரில் உள்ள 208 எண்ணம் தெருவிளக்குகளுக்கான மின்இணைப்புபெட்டிகள், வயரிங் வேலைகள் அவற்றிற்கான எலக்ட்ரிப்பொருள்கள் உட்பட இரண்டாம் கட்டமாக 53 பெட்டிகள் புதியதாக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1340 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-26 | இந்நகராட்சியின் பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN 65W9658 ஈப்பு வாகனத்தில் உதவிசெயற்பொறியாளர் அவர்கள் அலுவலக பணியில் ஈடுபட்டுள்ளபோது வாகனம் திடீர் பழுது ஏற்பட்டு வழியில் நின்று விட்டது, உடனடியாக மெக்கானிக்கை வரவழைத்து பார்த்தபோது செல்ப் மோட்டார் ,பெண்டைக்ஸ் சரிசெய்ய, சோல்னா சுவிட்ச், சென்சார் கம்லைண்டு, ரேடியேட்டர் ஓஸ், பேன் பெல்ட், கூலான்ட் ஆயில், சைலன்ஸர் புஸ் ஆகிய பழுதுகள் சரிசெய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், அதற்குண்டான செலவுத்தொகை ரூ.12,500/-க்கு பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**அலுவலககுறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1341 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-27 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 மணிநகர் பகுதியில் நூலக கட்டிடம் அமைக்கப்படவுள்ள இடத்தில் அதனை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க நகர்மன்ற உறுப்பினர் வேண்டுகோளின் படி, நகர்மன்றத்தலைவர் அவர்கள் பரிந்துரையின் பேரிலும், மேற்படி இடத்தில் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1342 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| பொருள்-28 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட முக்கிய பகுதிகளில் உயர்மின் கோபுர விளக்கு ((Highmast) 30 எண்ணம் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. தற்போது அடிக்கடி உயர்மின்கோபுர விளக்குகளில் பழுது ஏற்பட்டு வருகின்றது. அதனால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதால், அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் படியும், நகர்மன்றத்தலைவர் அவர்கள் பரிந்துரையின் பேரிலும், மேற்படி உயர்மின்கோபுர விளக்குகளின் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இருந்து ஒரு வருட கால பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>**தீர்மானம் எண். 1343 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-29 | பரமக்குடி நகராட்சியில் அம்ரூத் 2.0- 2021-22-ன் கீழ் உய்யவந்த அம்மன் கோவில் ஊரணியை மேம்படுத்தும் பணி ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொண்டதற்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில், கீழ்க்கண்ட நாளிதழ்களில் செய்திகள் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்ட விவரப்படி தொகைகள் வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**வ,எண்** / **நிறுவனம்** / **பட்டியல் தொகை(ரூ)**<br>1. / தமிழக நியூஸ் / 16,200<br>2. / தமிழ்சுடர் / 23,625<br> / **மொத்தம்** / **39,825**<br><br>**அலுவலககுறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண். 1344 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-30 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பள்ளிவாசல் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2023-24-ன் கீழ் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடைக்கு முன்பு நின்று, பொதுமக்கள் வெயிலிலும் மற்றும் மழைக்காலங்களிலும் பொருட்கள் வாங்குவதற்கு சிரமம் ஏற்படுகின்றது, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நியாயவிலைக்கடையின் முன்பு உள்ள இடத்தில் மேற்கூரை(GI Sheet) அமைத்துக்கொடுக்க நகர்மன்ற உறுப்பினர் வேண்டுகோளின் படி, நகர்மன்றத்தலைவர் அவர்கள் பரிந்துரையின் பேரிலும், மேற்படி இடத்தில் உள்ள நியாயவிலை கடைக்கு மேற்கூரை(GI Sheet) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.**மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>**தீர்மானம் எண். 1345 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-31 | பரமக்குடி நகராட்சி வணிக வளாகக் கடைகளுக்கு மதிப்பு கூட்டுவரி (GST) ரூ.20000000.00 செலுத்துமாறு விருதுநகர் வணிகவரித்துறையில் இருந்து G.S.T எண். 33AAALC1887B1ZL dated: 05.12.2025 இக்கடிதத்தினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் W.P.(MD)No.317/2026 & W.M.P(MD) No.310 dated: 25.12.2025 வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதற்கான கட்டணத் தொகை ரூ.200000.00 செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண். 1346 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-32 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் பாகம் எண்.29 முதல் 121 வரை உள்ள பாகங்களுக்கு வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டு No Mapping and logical Discrepancies Notice Download and printout 26000nos இரண்டு பக்கத்திற்கு print out எடுத்துதற்கு கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>ஆர்.எஸ்.ஓய் ஜெராக்ஸ், பரமக்குடி — ஒரு பக்கத்திற்கு ரூ.1.00<br>தடம் ஜெராக்ஸ், எமனேஸ்வரம் — ஒரு பக்கத்திற்கு ரூ.1.50<br>பிஸ்மி ஜெராக்ஸ்,பரமக்குடி — ஒரு பக்கத்திற்கு ரூ.2.00<br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.எஸ்.ஓய் ஜெராக்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.எஸ்.ஓய் ஜெராக்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 1347 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-33 | பரமக்குடி நகராட்சியின் தணிக்கை கணக்கு 2024 - 2025 மற்றும் 2025-2026 ஆண்டுக்கு பணி மேற்கொள்வதற்கும், இரண்டு ஆண்டுகளுக்கு ஆண்டு கணக்குகள் முடித்து ஒப்படைப்பதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.200000.00 நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 1348 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| பொருள்-34 | பரமக்குடி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் நாளுக்கு நாள் தெருநாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது மேலும் தெருநாய்களை பிடித்து ARV தடுப்பூசி செலுத்தும் பணிகள் நகராட்சியும் கால்நடை துறையும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. தற்பொழுது வெளிநபர்கள் மூலமே தெருநாய்கள் ஒன்றுக்கு பிடிக்க 200 ரூபாய் வழங்கப்பட்டு நாய்களை பிடிக்கப்பட்டு அதற்கு ARV தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது தற்பொழுது கால்நடைத்துறையினர் நகராட்சியில் பணிபுரியும் 5 சுகாதாரப் பணியாளர்களுக்கு தெரு நாய்களை வளைமூலம் பிடிக்க பயிற்சி வழங்கப்பட உள்ளது அவ்வாறு பிடித்து தெருநாய்களுக்கு அவ்விடத்திலேயே தடுப்பூசி செலுத்த உள்ளது. எனவே, அதற்கு தேவையான Buterfly net with stain stred frame 3ft lenth - 4 எண்ணம் உபகரணங்கள் வாங்கி வழங்கவும் அதற்காகவும் தோராய செலவினம் ரூபாய் 35000/- மற்றும் தடுப்பூசி செலுத்த கால்நடை பராமரிப்புத் துரையினார் ஒரு நாய்க்கு 17 ரூபாய் விகிதம் செலுத்த வேண்டியுள்ளது.அதற்கு ஆகும் தோராய செலவீனம் ரூ. 15,000 ரூபாய்க்கும் மன்றம் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br><br>**தீர்மானம் எண்.1349 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-35 | பரமக்குடி நகராட்சி பகுதியில் 36 வார்டுகளில் 26726 வீடுகள் மற்றும் 4383 வணிக நிறுவனங்களில் இருந்து 34.45 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. அவ்வாறு உருவாகும் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பொருட்டு 3 எண்ணம் கொண்ட நுண்ம உரமாக்கல் மையம் (MCC) செயல்பட்டு வருகிறது. நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உருவாகும் மக்கும் குப்பைகளை நுண் உரமாக்கல் மையத்திற்கு கொண்டு சென்று உரமாக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு உரமாகும் உரத்தை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி உள்ளதால் அவற்றை ஆய்வுக்கு அனுப்ப ஆகும் செவீனத்தை ரூ.20000.00 வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1350 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-36 | பரமக்குடி நகராட்சிக்குப்பட்ட 36வார்டுகளில் 26726 வீடுகள், 4383 வர்த்தக நிறுவனங்கள் மற்றும் 1 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை வசித்து வருகின்றார்கள். இந்நகராட்சியில் நாளொன்றுக்கு 34.45 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. அவ்வாறு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை MCC க்கு (நுண்ம உரமாக்கல் மையம்) கொண்டு சென்று உரமாக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் மக்காத குப்பைகளிலிருந்து எரியக்கூடிய குப்பைகளை (Combustible Waste) சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பும் பணியும் நடைபெற்று வருகிறது. அவ்வாறு எரியக்கூடிய குப்பைகளை சிமெண்ட் ஆலைகளுக்கு எடுத்து செல்வதற்கு லாரி வாடகை உள்ளிட்ட போக்குவரத்து செலவுகளை நகராட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே ஒரு வருட காலத்திற்கு எரியக்கூடிய குப்பைகளை லாரி |

மூலம் தொடர்ந்து சிமெண்ட் ஆலைகளுக்கு ஏற்றி அனுப்புவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**தீர்மானம் எண்.1351 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-37

நகர்மன்ற தீர்மான எண். 1247 நாள்.15.10.2025ன்படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு தேவையாள தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்ய சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 24.11.2025 அன்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றன.

| வ. எண். | விநியோகம் செய்ய வேண்டிய தளவாடச் சாமான்கள் விபரம் | SVR Traders, Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி (ரூ.) | G.V.Agencies, Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி (ரூ.) |
|---|---|---|---|
| 1. | மண்வெட்டி | 685 | 695 |
| 2. | கடப்பாறை | 1095 | 1115 |
| 3. | அரிவாள் | 950 | 965 |
| 4. | சம்மட்டி | 975 | 995 |
| 5. | தகரகூரை | 875 | 890 |
| 6. | வாறுகால் கரண்டி | 995 | 1115 |
| 7. | இரும்பு வாளி | 685 | 695 |
| 8. | வாங்கருவாள் பிடியுடன் | 680 | 715 |

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளி களில் குறைந்த தொகைக்கு தளவாடச் சாமான்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய SVR Traders, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த தொகைக்கு தளவாடச் சாமான்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய SVR Traders, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு **முன் அனுமதி பெற்று** வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1352 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-38

நகர்மன்ற தீர்மான எண்.1300 நாள்.01.12.2025ன்படி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக Vehicle Mounted fogging machine கொள் முதல் செய்ய சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 30.01.2025 அன்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | கொள் முதல் விவரம் | **System Engineering Chennai** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | **S.N Enterprises Chennai** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1. | Vehicle Mounted fogging machine -1 எண்ணம் | ரூ.6,48,000.00 | ரூ.6,52,000.00 |

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **System Engineering Chennai** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குறைந்த தொகைக்கு கொசு மருந்து தெளிப்பான் இயந்திரம் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **System Engineering Chennai** என்ற நிறுவனத்திற்கு மன்றத்தின் பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தைபொதுநிதியிலிருந்துமேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1353 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-39 | பரமக்குடி நகராட்சி பொதுசுகாதரப்பிரிவில் கசடு கழிவு மேலாண்மை உப விதிகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) அத்தியாயம் X-A பிரிவு 199 XI பகுதி IV 2019 ஆண்டில் வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி பரமக்குடி நகராட்சி பகுதிகளில் கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் ஒழுங்கு படுத்துவதற்காக துணை விதிகள் ஏற்படுத்த இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் வெளியிட்டு மதுரை அச்சகத்தில் அச்சடிக்க பக்கத்திற்கு ரூ.3000/-வீதம் ஆங்கில மொழி தமிழ்மொழியின் மொத்த பக்கம் 63க்கு 3000X63=189000.00 மட்டும் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதிக்கு<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1354 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-40 | இந்நகராட்சியின் பொறியியல் பிரிவு பராமரிப்பில் இயங்கிவரும் தெருவிளக்கு வாகனம் TN65W8911-ல் செல்ப் மோட்டார் பழுது, வயரிங் வேலைகள் மற்றும் ஹைட்ராலிக் பம்ப் ஆயில் லீக் சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1355 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-41 | இந்நகராட்சிக்குட்பட்ட 16, 20, 28 மற்றும் 34 ஆகிய வார்டுகளில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடைகளுக்கு முன்பு நின்று, பொதுமக்கள் வெயிலிலும் மற்றும் மழைக்காலங்களிலும் பொருட்கள் வாங்குவதற்கு சிரமம் ஏற்படுகின்றது, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நியாயவிலைக்கடையின் முன்பு உள்ள இடத்தில் மேற்கூரை (GI Sheet) அமைத்துக்கொடுக்க நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் படியும், நகர்மன்றத்தலைவர் அவர்கள் பரிந்துரையின் பேரிலும், மேற்படி இடத்தில் உள்ள நியாயவிலை கடைகளுக்கு மேற்கூரை(GI Sheet) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.1356 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-42 | பரமக்குடி நகராட்சி அனுமதி பெற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள வார்டு-ஜி, பிளாக்- 24 , நகரப்புல எண்.39/19 விஸ்தீரணம் 95.95 ச.மீ பூங்கா இடம் ஆக்கிரமிப்பு தொடர்பாக சார்பு நீதிமன்றம் பரமக்குடி திரு.கார்த்திகேயன் மற்றும் திரு.முருகானந்தம் என்பவர் தொடர்ந்த முதலேற்பு வழக்கு எண்.36/2022 மற்றும் 37/2022 நீதிமன்ற தீர்ப்பு வாதிக்கு சாதகமாக கடந்த 11.02.2026 வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் நகல் நீதிமன்றத்தில் |

| | |
|---|---|
| | பெற்று மாவட்ட நீதிமன்றம் இராமநாதபுரம் 30 தினங்களுக்குள் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்ய இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ஜான்ராஜதுரை அவர்கள் மூலம் நடத்திடவும் மேலும் மேற்படி வழக்கு தாக்கல் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வழக்கு கட்டணத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 1357 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

தலைவர்
பரமக்குடி நகர்மன்றம்